# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **திருமதி. D. ஜான்சிராணி, MBA., LLM.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, ஜுலை திங்கள், 21–ஆம் நாள், திங்கட்கிழமை

**I.A. No. 03 of 2025 in O.S. No. 233 of 2004**
**(CNR No. TNSA13-000108-2004)**

1. ராஜம்மாள்
2. ராணி (எ) மாரியம்மாள்
3. ஞானசுந்தரம் .. மனுதாரர்கள் / வாதிகள்

எதிராக

1. சின்னப்பன் (இறந்தவர்)
2. சாமிநாதன் (இறந்தவர்)
3. பங்குராஜ் (இறந்தவர்)
4. ஜீவரத்தினம் (இறந்தவர்)
5. ஜெயராணி
6. விமலா ரோசி
7. நிர்மலா ரோசி
8. மைக்கேல்ராஜ்
9. பாலன் (எ) பால்ராஜ்

***.. 2 ...***

10. ஜார்ஜ்

11. ராஜாமணி

12. ஆரோக்கியமேரி .. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

13. ஏஞ்சலின் செல்வகுமாரி

14. மார்கர்ட்

15. ராபர்ட் ராஜன் .. எதிர்மனுதாரர்கள் / 4–ம் பிரதிவாதியின் வாரிசுகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 17.07.2025 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபொழுது, மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. V. குமரவேல் அவர்களும், 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் காலமாகிவிட்ட நிலையில், 13 முதல் 15 எதிர்மனுதாரர்கள் / 4–ம் பிரதிவாதியின் வாரிசுகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. P. கோபி அவர்களும் ஆஜராகியும், 5 முதல் 12 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாகியும், இரு தரப்பு வாதம் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்து இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உத்தரவுரை

4–ம் பிரதிவாதியின் வாரிசுகளான 13 முதல் 15 வரை எதிர்மனுதாரர்களை இவ்வழக்கில் 13 முதல் 15 வரையான பிரதிவாதிகளாக சேர்க்க ஏற்பட்ட 1271 நாட்கள் காலதாமதத்தினை மன்னித்து இம்மனுவை ஏற்றுக்கொள்ள அனுமதி வேண்டி மனுதாரர்கள் / வாதிகள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

.. 3 ...

2. <u>மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :</u> மனுதாரர்கள் / வாதிகள் அசல் வழக்கை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளனர். இந்நிலையில், 4–ம் பிரதிவாதி கடந்த 26.03.2021 அன்று இறந்துவிட்டார். ஏஞ்சலின் செல்வகுமாரி, மார்கரட் என்ற இரு மகள்களும், ராபர்ட் ராஜன் என்ற ஒரு மகனும் 4–ம் பிரதிவாதியின் வாரிசுகள் ஆவார்கள். இறந்துபோன 4–ம் பிரதிவாதியின் வாரிசுகளை அசல் வழக்கில் 13 முதல் 15 பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கு நடத்துவதற்கு உரிய காலத்தில் மனு செய்யாத காரணத்தினால் மேற்படி வழக்கானது 4–ம் பிரதிவாதிக்கு எதிராக அபேட்மெண்ட் ஆகிவிட்டது. மேற்படி காலதாமதம் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. 4–ம் பிரதிவாதியின் வாரிசுகளையும், அவர்களது விலாசங்களையும் கண்டுபிடிக்க காலதாமதமாகிவிட்டது. 4–ம் பிரதிவாதியின் வாரிசுகளை சேர்க்க ஏற்பட்ட 1271 நாட்கள் காலதாமதத்தினை மன்னிக்க வேண்டி மனு தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இல்லையெனில் மனுதாரர்கள் / வாதிகளுக்கு பெருத்த கஷ்டநஷ்டம் ஏற்பட்டுவிடும். இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எவ்வித பிரச்சனையும் ஏற்படாது. எனவே, 4–ம் பிரதிவாதியின் வாரிசுகளை இவ்வழக்கில் 13 முதல் 15 வரையிலான பிரதிவாதிகளாக சேர்க்க ஏற்பட்ட 1271 நாட்கள் காலதாமதத்தினை மன்னித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டி மனுதாரர்கள் / வாதிகள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

3. <u>15–ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 13 மற்றும் 14 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>

மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தையும் எதிர்மனுதாரர்கள் மறுத்துள்ளனர். மேலும், 4–ம் எதிர்மனுதாரர், 13 முதல் 15 வரையான

.. 4 ...

எதிர்மனுதாரர்களின் தாயார் ஆவார். 4–ம் எதிர்மனுதாரர் ஏற்கனவே தாவா சொத்தின் ஒரு பகுதியை பதிவு செய்யப்பட்ட கிரயப்பத்திரத்தின் மூலம் கிரயம் பெற்று, மேற்படி சொத்தில் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வந்தார். மனுதாரர்கள் / வாதிகள் தாவா சொத்தில் எக்காலத்திலும் சுவாதீனத்திலோ, அனுபவத்திலோ இருந்ததில்லை. வாதிகளும், எதிர்மனுதாரர்கள் / 4–ம் பிரதிவாதியின் வாரிசுகளும் ஒரே கிராமத்தில் வசித்து வருகின்றனர். மேலும் அவர்கள் ஒருவருக்கொருவர் நன்கு அறிந்தவர்கள். பிரமாண பத்திரிக்கையில் 4–ம் பிரதிவாதியின் வாரிசுகளை கண்டுபிடிக்க 1271 நாட்கள் ஏற்பட்ட காலதாமதத்திற்கான காரணத்தை மனுதாரர்கள் கூறியிருப்பது ஜோடிக்கப்பட்ட ஒன்று. ஒவ்வொரு நாளும் ஏற்படும் காலதாமதத்தை உரிய ஆவணங்களை கொண்டு நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டும். எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

4. **தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,**

*மனுதாரர்கள் / வாதிகள் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா?*

5. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6. **<u>தீர்வு :</u>**

1) மனுதாரர்கள் / வாதிகள் இம்மனுவை, வழக்கின் 4–ம் பிரதிவாதி கடந்த 26.03.2021–ல் இறந்துவிட்டதாகவும், அவரது வாரிசுகளை வழக்கின்

*.. 5 ...*

தரப்பினர்களாக சேர்க்க மனு தாக்கல் செய்வதில் 1271 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாகவும், மேற்படி காலதாமதமானது 4–ம் பிரதிவாதியின் வாரிசுகளின் விலாசங்கள் கண்டுபிடிக்க இயலாததால் ஏற்பட்டதாகவும், அந்த காலதாமதத்தை மன்னித்து இம்மனுவை ஏற்க வேண்டுமெனவும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

2) இவ்வழக்கை மனுதாரர்கள் / வாதிகள், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக பாகம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள். இவ்வழக்கில் இறந்துபோன 4–ம் பிரதிவாதியின் வாரிசுகளை வழக்கின் தரப்பினர்களாக சேர்க்க வேண்டியது அவசியமாகும். எனவே, இம்மனுவை கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

3) இம்மனுவை மனுதாரர்கள் / வாதிகள் 1271 நாட்கள் காலதாமதமாக தாக்கல் செய்துள்ளதாலும், வழக்கானது கடந்த 2004–ம் ஆண்டிலிருந்து நிலுவையில் இருந்து வருவதாலும் மனுதாரர்கள் / வாதிகள் செலவுத்தொகையாக ரூ.2,000/–ஐ எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு 25.07.2025–ற்குள் செலுத்த வேண்டும். தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும்.

7. இறுதியாக, மனுதாரர்கள் / வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை இந்நீதிமன்றம் செலவுத்தொகையுடன் அனுமதித்து உத்தரவிடுகிறது.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்துத்–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று

.. 6 ...

2025–ஆம் ஆண்டு, ஜூலை திங்கள், 21–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2025.07.21 18:28:18 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சாட்சிகள் : இல்லை

எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் : இல்லை

மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை

நீதிமன்ற சாட்சிகள் : இல்லை

நீதிமன்ற சான்றாவணங்கள் : இல்லை

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2025.07.21 18:28:27 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

**மு.மா.உ.நீ., (மு.கூ.பொ.) ஆத்தூர்.**

**இ.ம.வ. எண் 03/2025**

**---------------**

**அ.வ. எண் 233/2004**

அசல் / வரைவு உத்தரவுரை

நாள் : 21.07.2025